[திரு. டி. எஸ். ஆதிமூலம்] [1968 மார்ச் 28

எல்லாம் இதனால் ஸ்தம்பித்திருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அங்குள்ள துன்பங்களையும், அதிகாரிகளின் கெடுபிடிகளையும் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாதாரண நிர்வாகத் திற்கு உட்பட்ட காரியமாக இருப்பதால் இதற்கு அனுமதி மறுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

(iii) நம்பியூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பருவ மழையின்மையும் விளைச்சலின்மையும்

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி, கீழ்க்காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினை குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒற்றிவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"கோவை மாவட்டம் கோபி வட்டம், நம்பியூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் பருவமழை தவறியதன் காரணமாக தோட்டக்கால் புன்செய்ப் பயிர்கள் விளைச்சலின்றி கரிவு ஏற்பட்டு, அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்பு இழந்துள்ள நிலைபற்றி விவாதிக்க வேண்டும்".

தலைவர் அவர்களே, இந்த நம்பியூர் ஒன்றியம் என்பது பஞ்சப் பிரதேசமாக நோட்டிபிகேஷன் செய்யப்பட்டது. இது அவனாசி, பல்லடம் என்ற இரண்டு தாலுக்காக்களை ஒட்டியது. இவைகளை விட மிக வறட்சியுள்ள பிரதேசம். அங்கே மக்கள் அவதிப்படுவதாகவும், உடனடி நிவாரணம் செய்ய வேண்டுமென்றும் நிலவரி மானியக் கோரிக்கையின்போதும் நான் எடுத்துச் சொன்னேன். ஆனால் அந்த நிவாரணத்தை உடனடியாகச் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடி நிவாரண வேலைகளைச் செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறார். நம்பியூர் பிர்க்கா விவசாயிகள் சங்கச் செயலாளரிடமிருந்து எனக்கு ஒரு உருக்கமான கடிதம் வந்திருக்கிறது. அங்கே மக்கள் பட்டினி கிடந்து சாகக்கூடிய நிலைமையில் உள்ளார்கள் என்றும், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும், தொழிலாளிகள், அரிசனங்கள் ஆகிய எல்லோரும் பட்டினி கிடக்கிறார்கள் என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. இந்த நிலையை இந்த அரசு விரும்பாது என்பது தெரியும். அங்கே வாழும் மனிதர்களுக்கு எல்லாம் அடிப்படையான தேவையாகிய உணவு கிடைக்கும் வகையில் நிவாரணம் செய்ய வேண்டும். அவனாசி, பல்லடம் தாலுக்காக்கள் இதையொட்டியிருப்பதால், இவைகளை பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவித்திருப்பதுபோல் இந்தப் பகுதியையும் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, உடனடியான நிவாரணங்களைச் செய்ய அரசு முன்வரவேண்டும். இதில் நிர்வாக இடைஞ்சல்கள் இருந்தாலும் நிவர்த்திக்க அதற்கு தக்க

1968 மார்ச் 28] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சாதாரணமாகச் செய்கின்ற குடும்பக் கார்டு முறையில் ரேஷன் வழங்க உடனடியாக சர்க்கார் ஆணை பிறப்பிக்க வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து பரிசீலனை செய்து விவாதிக்க இந்த சபையின் அலுவல்களை அரை மணி நேரம் ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே தான் விவாதத்தில் இதைப்பற்றிக் கூறியதாக இப்போதுதான் சொன்னார். இதைப்பற்றி பேரவையிலே முன்னாலே பேசியிருக்கிறார். It shall not revive discussion of a matter which has been discussed in the same session என்ற முறையில் தள்ளிவிடும்படியான காரியமாக இருந்திருக்கிறது. சட்டப் பேரவை விதி 68 (3) உள்விதி (6), இது ஏற்கெனவே பேரவையில் பேசியது என்று சொல்லிவிட்ட காரணத்தால் இதை அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

(iv) வடுகுடி கிராம அரிசனங்கள் குடிசைகளுக்குத் தீவைப்பு

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்கக் கோரி ஓர் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

"நன்னிலம் தாலுக்கா, வடுகுடி கிராமத்திலுள்ள அரிசன மக்களின் குடிசைகளுக்கு தீ வைத்ததன் விளைவாக எல்லாக் குடிசைகளும் எரிந்து சாம்பலாகி அதனால் அரிசன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றி விவாதிக்க வேண்டி, சபையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்க வேண்டுமாக கோருகிறேன்."

தலைவர் அவர்களே, வடுகுடி கிராமத்திலுள்ள அரிசன சேரி மக்களின் குடிசைகள் எல்லாம் தீ விபத்தால் சாம்பலாகி, மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக விவாதிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஆகவே, இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாதலால், 50 (viii) விதியின்படி இதை அனுமதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(v) தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டதும் தொழிலாளர் வேலை இழப்பும்

திரு. எம். பூபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன்படி கீழ்காணும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்.